CC. No. 288/2025

நாள் :-10.03.2026

அ.சா. 2 :- மீனாட்சி

(எதிரிகள் ஆஜர்).

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு முன்னிலையானார். சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டது.

1–வது எதிரி தரப்பு குறுக்கு விசாரணை :-

கடன் பெரைடு நிலுவை பட்டியல் யார் எழுதுவார் என்றால் செயலர் சரிபார்ப்பார். இந்த சங்கத்தை கடன் கொடுப்பது காசோலை மூலமாகதான் என்றால் சரிதான். கடன் கேட்பு மனு சங்கத்தில் பராமரிக்கப்படும் என்றால் சரிதான். கடன் கேட்பு மனு ஆய்வு செய்தேன். கடன் கேட்பு மனு என்னுடைய தணிக்கை அறிக்கையுடன் இணைத்துள்ளேனா என்றால் இல்லை. கடன் கேட்பு மனுவை பார்வையிட்ட விபரத்தை எனது தணிக்கை அறிக்கையிலோ அல்லது போலீசார் விசாரணையிலோ சொல்லவில்லை என்றால் சொல்லவில்லை. 81 ஆபிசர் என்னை விசாரித்தார் என்றால் விசாரிக்கவில்லை. இந்த தணிக்கையானது ஒவ்வொரு ஆண்டும் சங்கத்தில் நடத்தப்படும் என்றால் சரிதான். 2005 முதல் 2013 வரையிலான தணிக்கை அறிக்கையில் ஏதேனும் முறைகேடு நடந்ததாக சொல்லியுள்ளார்களா என்றால் இல்லை. மேற்படி காலங்கட்டங்களில் குறைநிவர்த்தி பட்டியலிலும் வழங்கப்படவில்லை என்றால் சரிதான். இந்த சங்கம் 2015–ம் ஆண்டு வரை லாபத்தில் இயங்கியுள்ளது என்றால் சரிதான். கடன் பெரைடில் கடன் முடிவடைந்ததாக குறிப்பிடப்பட்டால் கடன் முடிவடைந்ததாக தான் அர்த்தம். 2010 முதல் 2015 ஆண்டு வரையிலான ஆண்டு தணிக்கை சரியாக நடந்ததாக என்றால் அது எனக்கு தெரியாது. மேற்படி சங்கமானது ஆசிரியர்கள் கூட்டமைப்பில் உள்ள சங்கம் என்றால் சரிதான். அந்த சங்கத்தில் உறுப்பினர்களாக உள்ளவர்கள் ஆசிரியர்கள் என்றால் ஆசிரியர்கள் மட்டும்தான் உறுப்பினராக இருக்க முடியும். இந்த சங்கத்தில் ஆசிரியருடைய வைப்பீட்டு நிதியை வைத்துதான் கடன் வழங்கப்படுகிறது என்றால் சரிதான். அவ்வாறு தொகை வைப்பீடு செய்யக்கூடிய கடன் வட்டியுடன் செலுத்தக்கூடியது என்றால் சரிதான். அவ்வாறு நான் கணக்கீடு செய்த ஆண்டில் எந்த குறைபாடும் வைப்பீடு செய்யப்படுவதற்கு

CJM, MAYILADUTHURAI.

10/03/26

வட்டி கொடுக்கவில்லை என்று குறைபாடு எதுவும் இல்லை. 2012–2013, 2014–2015 ஆகிய ஆண்டுகளில் கடன் கொடுப்பது சம்மந்தமாக ஏதேனும் குறைபாடு இருந்தால் சங்கம் நஷ்டத்தில் இருப்பதாக தான் கூறியிருப்பார்கள் என்றால் சரிதான். 2012–2013 முதல் 2014–2015 வரை போலியாக கடன் பெரைடில் முடிவு செய்யப்பட்ட கடன்கள் நிலுவை பட்டியலில் நிலுவை காண்பிக்கப்பட்ட விபரம் அந்த ஆண்டுகளில் தணிக்கை செய்யப்பட்ட அறிக்கையில் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். அவ்வாறு மேற்படி ஆண்டுகளில் ஏதேனும் குறைபாடு இருந்தால் தணிக்கை அதிகாரி கூறியிருப்பார் என்று சொன்னால் அதை நான் கூற இயலாது. சங்க உறுப்பினர்களான கடன்காரர்கள் கட்ட வேண்டிய கடனுக்கு உரிய அசல் வட்டி குறிப்பிட்டு டிமாண்ட் நோட்டீஸ் அனுப்பப்படும் என்றால் சரிதான். டிமாண்ட் நோட்டீஸ் அனுப்பியவர்களின் விவரத்தை நான் ஆய்வு செய்து எனது தணிக்கை அறிக்கையுடன் சமர்ப்பித்தேனா என்றால் ஆய்வு செய்தேன் ஆனால் சமர்ப்பிக்கவில்லை. சங்கத்தில் உள்ள உறுப்பினர்கள் சங்கத்தில் முறைகேடு நடந்ததாகவோ நான் பாதிக்கப்பட்டுள்ளேன் என்றோ புகார் கொடுத்தார்களா என்றால் புகார் எதுவும் கொடுக்கவில்லை. 1–வது எதிரி 2016–ல் பணிஓய்வு பெற்றுவிட்டார். அ.சா.ஆ.6, 11, 17 ஆகியவை 2010–2011–ல் பதிவானது என்றால் சரிதான். அந்த ஆவணங்களில் நிலுவை பட்டியலில் குறை எதுவும் இல்லை என்றால் சரிதான். 2013–2014 ஆண்டுக்கான தணிக்கை நான்தான் பார்த்தேன் அது அ.சா.ஆ.22, 64 ஆகும். அதில் நான் குறை எதுவும் சொல்லவில்லை. 2014–2015–க்கான கடன் பெரைடு நிலுவைப்பட்டியில் செயலரோ தலைவரோ கையொப்பம் இடவில்லை என்றால் சரிதான். அ.சா.ஆ.9 கடன் பெரைடு நிலுவை பட்டியல் செயலாளரால் தயாரிக்கப்படவில்லை என்பதால் தான் அவரின் கையொப்பம் இடவில்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. 2013–2014 நடந்த தணிக்கை தங்களால் மேற்கொள்ளப்பட்ட நிலையில் அதில் குறைபாடுகள் எதுவும் இல்லாத நிலையிலும், அதற்கு முன்பாக உள்ள ஆண்டுகளில் குறைபாடுகள் உள்ளதாக நான் தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இந்த சங்கத்தில் முறைகேடுகள் எதுவும் நடைபெறாததால் தான் சங்கம் லாபகரமாக நடந்தது என்றால் சரியல்ல. ஆவணங்களை சரிவர

CJM, MAYILADUTHURAI.

பரிசீலனை செய்யாமல் தணிக்கை அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. சங்கத்தில் முறைகேடுகள் எதுவும் நடைபெறவில்லை அதுபோல சங்கத்தில் நிதி மோசடி நடைபெறவில்லை என்றால் சரியல்ல.

<u>2–வது எதிரி தரப்பு குறுக்கு விசாரணை :-</u>

கூட்டுறவு நிறுவனத்தில் Auditor–ராக 2014–ல் பணியமர்ந்தேன். எந்த வருடத்தில் ஆசிரியர் சிக்கனம் மற்றும் கடன் சங்கத்தில் Audit செய்தேன் என்று ஞாபகம் இல்லை. 2016 ஆம் வருடம் இந்த வழக்கும் சம்மந்தமாக Audit செய்தேன். பொதுவாக வருட வருடம் ஆசிரியர் சிக்கனம் மற்றும் கடன் சங்கத்தில் Audit நடக்கும். எனக்கு முன்பு Audit பார்த்தவர்கள் குறைபாடு எதுவும் சொல்லவில்லை. நான் சரியான Audit செய்யாமல் அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. 2016 ஜூன் முதல் ஜூலை 2016 ஆம் ஆண்டு ~~15~~ 13 நாட்கள் தணிக்கை செய்தேன். 2016 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் இறுதி அறிக்கை சமர்ப்பித்தேன். 2010 முதல் 2016 வரை உள்ள குறைபாடுகளை பார்த்து நான் இறுதி அறிக்கை சமர்ப்பித்தேன். நான் Audit சரியான முறையில் பார்க்காமல் Audit report தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. என்னுடைய அறிக்கையில் உள்ளதுபோல் எந்தவித முறைகேடும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல.

<u>மறு விசாரணை :-</u>

இல்லை.

இத்திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல அதனை என்னால் தட்டச்சரிடம் சொல்லப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியிடம் படித்து காண்பித்து அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டது.

தலைமை குற்றவியல் நீதிபதி,
மயிலாடுதுறை.

10/03/26

CJM, MAYILADUTHURAI.